162567

79-11-21

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம்.

---

[1979, ஒக்தோபர் மாதம் 8 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1979, ஒற்ரோபர் மாதம் 12 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : சதம் 65

தபாற் செலவு : சதம் 25

# 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம்

[1979, ஒக்தோபர் மாதம் 8 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ.—48/79
1240

குறித்தசில அரசாங்கத் திணைக்களங்களாலும் பகிரங்கக் கூட்டுத் தாபனங்களாலும் உள்ளூர் அதிகாரசபைகளாலும், கூட்டுறவுச் சங்கங் களாலும் வழங்கப்படும் சேவைகளை அத்தியாவசிய பொதுச் சேவைகள் என வெளிப்படுத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (1) சனாதிபதியானவர்—

குறித்தசில அரசாங்கத் திணைக்களங்களால், பகிரங்கக் கூட்டுத் தாபனங்களால், உள்ளூர் அதிகார சபைகளால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும் சேவைகளை அத்தியாவசிய பொதுச் சேவைகள் எனச் சனாதிபதி வெளிப்படுத்தலாம்.

(அ) இந்தச் சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப் பட்டுள்ள எவையேனும் சேவைகளை வழங்குவதில் ஈடுபட் டுள்ள ஒரு திணைக்களமாக அல்லது கூட்டுத்தாபனமாக அல்லது உள்ளூர் அதிகாரசபையாக அல்லது கூட்டுறவுச் சங்கமாக இருக்கின்ற ஏதேனும் அரசாங்கத் திணைக்களத் தில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது உள் ளூர் அதிகாரசபையில் அல்லது கூட்டுறவுச்சங்கத்தில், அல்லது அவற்றின் கிளையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஏதேனும் வகுதியினரான ஆட்களால் வழங்கப்படும் ஏதே னும் சேவை, இடையூறு செய்யப்படக்கூடிய அல்லது குழப்பப்படக்கூடிய சாத்தியமுள்ளதென ; அத்துடன்

(ஆ) அந்த வகுதியினரான ஆட்களால் வழங்கப்படும் சேவை யைப் பேணுதல் சமுதாயத்தின் நிலைபேற்றுக்கு அத்தியா வசியமாயுள்ளதென,

அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அவர், தோதான அமைச்சரின் கலந் தாலோசனையுடனும் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலமும், அந்தச் சேவையை அத்தியாவசிய பொதுச் சேவையொன்றாக வெளிப் படுத்தலாம்.

(2) இந்தச் சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எவையேனும் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஒரு திணைக்களமாக அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமாக அல்லது உள்ளூர் அதிகாரசபையாக அல்லது கூட்டுறவுச் சங்கமாக இருக்கின்ற ஓர் அரசாங்கத் திணைக்களத் தில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது உள்ளூர் அதிகார சபையில் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது அவற்றின் கிளையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஏதேனும் வகுதியினரான ஆட்களால் வழங் கப்படும் சேவையை அத்தியாவசிய பொதுச் சேவையொன்றென வெளிப் படுத்தி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று வலுவில் தொடர்ந்திருக்கையில்—

(அ) அந்தச் சேவையின் நோக்கங்களுக்காக அந்தத் திணைக்களத்தில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது உள்ளூர் அதிகார சபையில் அல்லது கூட்டுறவுச்சங்கத்தில் அத்தகைய கட்டளைத்

2—ஏ 44188—7,500 (09/79)

தேதிக்கு நேர் முந்திய நாளில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த, அல்லது அந்தச் சேவையின் நோக்கங்களுக்காக அந்தத் திணைக்களத்தால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தால் அல்லது உள்ளூர்அதிகாரசபையால் அல்லது கூட்டுறவுச்சங்கத்தால் அந்தத் தேதியின் பின்னர் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள எந்த ஆளும், அவரது வேலை இடத்துக்கு அல்லது அந்தத் திணைக்களத்தின், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது உள்ளூர்அதிகாரசபையின் அல்லது கூட்டுறவுச் சங்கத்தின் தலையாளால் அல்லது அத்தகைய தலையாளின் அதிகாரத்தின் கீழ்த் தொழிற்படும் ஆளொருவரால் காலத்துக்குக் காலம் குறிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு இடத்துக்கு வருகைதரத் தவறினால் அல்லது வருகைதர மறுத்தால், அல்லது அந்தத் திணைக்களத்தின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது உள்ளூர்அதிகாரசபையின் அல்லது கூட்டுறவுச் சங்கத்தின் தலையாளாலோ அல்லது அத்தகைய தலையாளின் அதிகாரத்தின் கீழ்த் தொழிற்படும் ஆளொருவராலோ, புரியும்படி பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேலையைப் புரியத் தவறினால் அல்லது புரிய மறுத்தால், அல்லது அத்தகைய வேலையைப் புரிவதற்கு அந்தத் திணைக்களத்தின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது உள்ளூர்அதிகார சபையின் அல்லது கூட்டுறவுச் சங்கத்தின் தலையாள் நியாயமானதென அபிப்பிராயப்படும் அத்தகைய காலத்துள் அத்தகைய வேலையைப் புரியத் தவறினால் அல்லது புரிய மறுத்தால்; அல்லது

(ஆ) எவரேனும் ஆள்—

(i) அந்தச் சேவை தொடர்ந்து நடைபெறுவதனை எந்தவிதத்திலேனும் இடையூறுசெய்தால், தடைசெய்தால், சுணக்கினால் அல்லது குறைத்தால்; அல்லது

(ii) அந்தச் சேவையின் நோக்கங்களுக்காக அந்தத் திணைக்களத்தில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது உள்ளூர்அதிகாரசபையில் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட வேறெவரேனும் ஆளை, அவரது வேலை இடத்துக்கு வருகைதராதவாறு எந்தவிதத்திலேனும் இடையூறு செய்தால், தடைசெய்தால், அல்லது தடுத்தால்; அல்லது

(iii) அந்தச் சேவையின் நோக்கங்களுக்காக அந்தத் திணைக்களத்தில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது உள்ளூர்அதிகாரசபையில் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட வேறெவரேனும் ஆளை, அவரது வேலை இடத்துக்கு வருகைதராது ஒதுங்கியிருக்கும்படி எந்தவிதத்திலேனும் ஏவினால், தூண்டினால் அல்லது ஊக்கமளித்தால்; அல்லது

(iv) அந்தச் சேவையின் நோக்கங்களுக்காக அந்தத் திணைக்களத்தில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது உள்ளூர்அதிகாரசபையில் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட வேறெவரேனும் ஆளை, அவரது வேலை இடத்தை விட்டுச்செல்லுமாறு வற்புறுத்தினால், ஏவினால், தூண்டினால் அல்லது ஊக்கமளித்தால்; அல்லது

(V) அந்தச் சேவையைக் கொண்டுநடாத்துவதில் அல்லது நடாத்துவது தொடர்பில் தொழிலேற்காதவாறு வேறெவரேனும் ஆளைத் தடுத்தால்; அல்லது

(இ) எவரேனும் ஆள் ஏதேனும் உடற்செயல்மூலம் அல்லது ஏதேனும் பேச்சுமூலம் அல்லது எழுத்துமூலம் வேறெவரேனும் ஆளை இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலைச் செய்யும்படி ஏவினால், தூண்டினால் அல்லது ஊக்கமளித்தால் (அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலை அதன் விளைவாக அவர் செய்தாலும்சரி செய்யாது விட்டாலும்சரி),

அவர் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

3. (1) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன், அக்கட்டளையானது முன்னதாகவே இல்லாதாக்கப்படலாம் என்பதற்கோ அல்லது ஒருமாத காலப்பகுதி முடிவடையும்போது அல்லது அதற்கு முன்னர் இன்னுமொரு கட்டளை ஆக்கப்படலாம் என்பதற்கோ பங்கமில்லாமலும் இப்பிரிவின் அடுத்துவரும் ஏற்பாடுகளுக்கமையவும், அத்தகைய தேதியிலிருந்து அத்தகைய ஒரு மாத காலப்பகுதியொன்றுக்கு நடைமுறையிலிருத்தலும் வேண்டும். 2(1) ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையின் நடைமுறையும் பிறவும்.

(2) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று கசெற்றில் வெளியிடப்பட்டதன்மேல், அத்தகைய கட்டளை உடனடியாகப் பாராளுமன்றத்தின் முன்னர் வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்தக் கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று பாராளுமன்றம் பத்து நாட்களுக்குள் காலாவதியாகாத அத்தகைய ஒத்திவைத்தலினால் அல்லது அமர்வு நிறுத்துகையினால் கூடாதிருக்குமிடத்து, அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் பாராளுமன்றம் கூட வேண்டுமென்று கூறும் பிரகடனமொன்றைச் செய்தலும் வேண்டும்; அத்துடன், அதற்கிணங்கப் பாராளுமன்றம் அப்பிரகடனத்தில் நியமித்த தேதியன்று கூடி அமருதல் வேண்டுமென்பதுடன், அந்நாள்வரை மட்டுமே அது ஒத்திவைக்கப்பட்டிருந்தது அல்லது அமர்வு நிறுத்தப்பட்டிருந்தது என்றுற்போன்று தொடர்ந்து அமருதலும் செயலாற்றுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும், அத்தகைய கட்டளை பாராளுமன்றத் தீர்மானமொன்றினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய, கசெற்றில் அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட பின்னரான பதினான்கு நாட்களைக் கொண்ட ஒரு காலப்பகுதியின்பின்னர் காலாவதியாதல் வேண்டும்:

ஆயின், பாராளுமன்றம் அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் ஒத்திவைத்தலினால் அல்லது அமர்வு நிறுத்துகையினால் கூடாதிருப்பின், அப்போது, அத்தகைய கட்டளை, அது அத்தகைய கூட்டத்தில் பாராளுமன்றத் தீர்மானமொன்றினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய, பாராளுமன்றம் கூடி அமர வேண்டியதான தேதியிலிருந்து பத்து நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியின் முடிவில் காலாவதியாதல் வேண்டும்.

4. (1) இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றைப் புரியும் ஆள் ஒவ்வொருவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு ஆண்டுகளுக்குக் குறை தவறுகள்.

யாததும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக எவரேனுமாள் ஏதேனும் நீதிமன்றத்தால் குற்றந்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து, நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி பின்வரும் கட்டளைகள் எவற்றையும் ஆக்குவதற்குப் போதுமான ஏதுக்கள் இருந்தால், நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் அது விதிக்கின்றதான வேறேதேனும் தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, பின்வரும் கட்டளைகளில் ஒன்றை அல்லது கட்டளைகள் இரண்டையும் ஆக்கலாம்; அதாவது

(அ) குற்றத்தீர்பளிக்கப்பட்ட அந்த ஆளின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் யாவும், குடியரசுக்கு இழக்கப்பட்டதாதல் வேண்டும் என்று கட்டளை ஆக்கலாம்;

(ஆ) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ்ப் பேணப்படும் ஏதேனும் இடாப்பில் ஏதேனும் உயர் தொழிலை அல்லது செய்தொழிலைப் புரிய உரித்துடையவரெனப் பதியப்பட்டுள்ளவராக இருக்கின்ற ஏதேனும் விடயத்தில், அத்தகைய ஆளின் பெயர் அத்தகைய இடாப்பிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும் என்று கட்டளை ஆக்கலாம்.

(3) நீதிமன்றமானது எவரேனும் ஆள் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் கட்டளையொன்றை ஆக்குமிடத்து, அத்தகைய ஆளினால் வழங்கப்படும் ஏதேனும் சேவை தொடர்பில் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் அத்தகைய ஆளினால் செய்யப்படும் ஆதனப் பாராதீனம் அல்லது கையுதிர்ப்பு ஒவ்வொன்றும் வெற்றும் வறிதுமானதாக இருந்திருப்பதாகவும் இருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 15(2) ஆம் பிரிவு ஏற்புடைத்தாகாமை.**

5. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு இச்சட்டத்தின்கீழான ஒரு தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு ஏற்புடையதாதலாகாது.

**வேலை நிறுத்தமொன்றை முன்னெடுத்துச் செல்லுவதற்கெனச் செய்யப்பட்ட ஒரு செயல் அல்லது செய்யாது விடப்பட்ட ஒரு தவிர்வு இச்சட்டத்தின் கீழான ஒரு குற்ற வழக்குத் தொடுப்பில் எதிர்வாதமாகாது.**

6. இச்சட்டத்தின்கீழான ஒரு தவற்றுக்காக எவரேனும் ஆளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய தவறாக அமைகின்ற ஏதேனும் செயல் அல்லது தவிர்வு, தாமோர் உறுப்பினராயிருக்கும் தொழிற்சங்கமொன்றினால் தொடங்கப்பட்ட ஒரு வேலை நிறுத்தத்தை முன்னெடுத்துச் செல்வான் வேண்டித் தம்மால் செய்யப்பட்டது அல்லது செய்யாது தவிர்க்கப்பட்டது என்று கூறுவது அவர்க்கு எதிர் வாதமாகாது.

இச்சட்டமானது வேறு எழுத்திலான சட்டங்களை விட மேலோங்கி நிற்றல்.

7. வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலுள்ள எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்துக்குமிடையில் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படுமாயின் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

பொருள் கோடல்.

8. இச்சட்டத்தில்—

"கூட்டுறவுச் சங்கம்" என்பது தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் சங்கம் என்று பொருளாகும்;

"தலையாள்" என்பது—

(அ) ஒரு கூட்டுறவுச் சங்கம் தொடர்பில், அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்று பொருளாகும்;

(ஆ) ஓர் உள்ளூர் அதிகாரசபை தொடர்பில், அவ்வுள்ளூர் அதிகார சபையின் முதல்வர் அல்லது தவிசாளர் என்று, அல்லது அவ் உள்ளூர் அதிகாரசபையின் அலுவல்களை நிருவகிக்கவென நியமிக்கப்பட்ட சிறப்பு ஆணையாளர் என்று பொருளாகும்; அத்துடன்

(இ) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் தொடர்பில், அத்தகைய கூட்டுத்தாபனத்தினது பணிப்பாளர் சபையின் தவிசாளர் என்று பொருளாகும் என்பதோடு, அந்தக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரையும் உள்ளடக்கும்;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமச்சபை எனப் பொருளாவதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களையும் நிறைவேற்றப்படும் பணிகளையும் புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவைபோன்ற தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும் பணிகளை நிறைவேற்றுவதற்கெனவும் கடமைகளைப் புரிவதற்கெனவும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது கம்பனிகள் கட்டளைச்சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்டுள்ளதும் அல்லது தாபிக்கப்படுவதும், கொடையென்ற வகையில், கடன் என்ற வகையில் அல்லது வேறுவகையில் அரசாங்கத்தினால் முழுக்க முழுக்க அல்லது பகுதியளவில் உதவப்பட்ட மூலதனத்தை அல்லது நிதியை உடையதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருளாகும்.

## அட்டவணை

1. உணவுப்பொருள்களையும் பானப்பொருள்களையும் வழங்குதலும், காத்தலும் பகிர்ந்தளித்தலும்.

2. பெற்ரோலியப் பொருட்கள், பெற்ரோலிய வாயு என்பன உள்ளிட்ட எரி பொருட்களை வழங்குதல் அல்லது பகிர்ந்தளித்தல்.

3. மின்சக்தி வழங்குதல்.

4. பயணிகளுக்கும் பண்டங்களுக்குமான பொதுப் போக்குவரத்துச் சேவைகள்.

5. நீர் வழங்குதல்.

6. அஞ்சற் சேவை, தொலைபேசிச் சேவை, தந்திச் சேவை, அகல்பரப்புச் சேவை.

7. கீழ்க் காண்பன தொடர்பில் செய்வதற்குத் தேவைப்படுகின்ற அல்லது அவசியமாகின்ற எத்தன்மைத்தான எந்த விபரணத்தையும் சேர்ந்த எல்லாச் சேவைகளும், வேலையும், தொழிலுதவியும் :—

(அ) உணவுப்பொருள் அல்லது பானப்பொருள், நிலக்கரி, எண்ணெய் அல்லது எரிபொருள் என்பவற்றுள் எவற்றையும், (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வரைவிலக்கணம் கூறப்பட்ட ஏதேனும் துறைமுகத்தினுள் இருக்கும் கலத்திலிருந்து பறித்தல், கொண்டுசெல்லல், தரையிறக்குதல், களஞ்சியப்படுத்தல், ஒப்படைத்தல், அகற்றுதல் என்பன ;

(ஆ) ஆசுப்பத்திரிகள், ஆதுலர் மனைகள், மருந்தகங்கள், இவற்றையொத்த வேறு நிறுவனங்கள் ஆகியவற்றில் நோயாளிகளைப் பராமரித்தல், ஏற்றுக்கொள்ளுதல், கவனித்தல், அவர்களுக்கு உணவூட்டல், பரிகாரம் செய்தல் என்பன ;

(இ) நீர்வழங்கல், மின்சக்தி வழங்கல், வடிகால் கழிகால் சேவைகள், நெருப்புச் சேவைகள், அம்புலன்சுச் சேவைகள், மலசலகூடச் சேவைகள், மலமகற்று சேவைகள் என்பவற்றுக்காக ஏதேனும் உள்ளூர்அதிகாரசபையால் பேணிவரப்படும் ஏதேனும் பொறுப்புமுயற்சி ;

(ஈ) தெருக்கள், பாலங்கள், மதகுகள், விமானநிலையங்கள், துறைமுகங்கள், புகையிரதப் பாதைகள் உட்பட தெரு மூலமான, புகையிரத மூலமான அல்லது ஆகாய மூலமான போக்குவரத்துச் சேவைகளுக்கான வசதிகளை ஏற்பாடுசெய்தலும் பேணுதலும்.

8. எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களாலும், தொழிற்சங்கங்களாலும் வழங்கப்படும் சேவைகள்.